**சுருக்கம்**

திட்டங்கள் – அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – 2007–08 ஆம் ஆண்டு முதல் 2010–11 வரையிலான நான்காண்டு காலத்தில் செயல்படுத்துதல் – ஆணைகள் – வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( பேரூ2) துறை**

அரசாணை(நிலை) எண்.20 நாள்: 13.02.2008

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 6.7.07.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித எண்.4970/2007/இ3, நாள் 25.7.07

- - - - -

**ஆணை :**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய மாநிலத் திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள நகர்ப்புற மக்கள் தொகையில் 28 விழுக்காட்டைக் கொண்டுள்ள 561 பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள 2007–08 முதல் 2010–11 வரையிலான நான்காண்டு காலத்தில் செயல்படுத்திட அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 6.7.2007 அன்று வெளியிடப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகள், ரூபாய் 50.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினால் பயன்பெறும். இவ்வரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 6.7.2007–இல் இணைப்பு 1 இல், 2007–08 ஆம் ஆண்டிற்கு அண்ணா மறுமலர்ச்சி திட்ட அமலாக்கத்திற்கு நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உலிக்கல், ஓவேலி மற்றும் அதிகரட்டி ஆகிய மூன்று பேரூராட்சிகள், முறையே வரிசை எண். 62, 63 மற்றும் 64 –இல் சேர்க்கப்பட்டுள்ளன.

2. நீலகிரி மாவட்டாட்சியர் தனது நேர்முக கடித எண்.34347/07 நாள் 13.7.2007 இல் 2007–08 ஆண்டிற்கு நீலகிரி மாவட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட (வரிசை எண். 63) ஓவேலி பேரூராட்சி கூடலூர் ஜென்ம நிலங்களில் பிரிவு 17இன் கீழ் வருகிறது என்றும் இங்கு நிலத்தீர்வை செய்யப்படவில்லை என்றும் இது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் மத்திய குழுவின் ஆணையின்படி இங்கு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் நடந்துவரும் நிலத்தீர்வை பணி காலதாமதாகும் என்றும் குறிப்பிட்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஓவேலி பேரூராட்சிக்குப் பதிலாக தேவர்சோலா பேரூராட்சியினை 2007–08 ஆம் ஆண்டிற்கான இணைப்புப் பட்டியலில் சேர்த்திடுமாறு கோரியுள்ளார். இதனை பேரூராட்சிகளின் இயக்குநர் பரிந்துரை செய்து, அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 6.7.2007க்கு தக்க திருத்தங்கள் வெளியிடுமாறு கோரியுள்ளார். பேரூராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்கிறது. அதற்கிணங்க முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது

## <u>திருத்தம்</u>

அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 6.2.2007 இல்

(i) 2007–2008 ம் ஆண்டு தொடர்பான இணைப்பு 1–இல் " நீலகிரி மாவட்டம்" என்பதன் கீழ் வரிசை எண்.63–இல் குறிப்பிடப்பட்டுள்ள 'ஓவேலி' என்ற பெயருக்கு பதிலாக 'தேவர்சோலா' என்ற பெயரை மாற்றிப்படிக்கவும் ;

(ii) 2008–09 ஆம் ஆண்டு தொடர்பான இணைப்பு II –இல் நீலகிரி மாவட்டம் என்பதன் கீழ் வரிசை எண்.62–இல் உள்ள தேவர்சோலா என்பதற்குப் பதிலாக 'ஓவேலி' என்ற பெயரை மாற்றிப்படிக்கவும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கே.தீனபந்து**
**அரசு செயலாளர்**

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை – 108
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், (சென்னை நீங்கலாக)
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
சிறப்பு ஆணையாளர் (ம) ஆணையாளர்,
கருவூலக் கணக்குத் துறை, சென்னை – 35.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை – 18.
மாநில கணக்காயர் ( Audit), சென்னை–18.
மாநில கணக்காயர் ( CAB) சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 1.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5.
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
தலைமைச் செயலக அனைத்து துறைகள், சென்னை – 9
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு ஊரக வளர்சசி (மற்றும்) உள்ளாட்சித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச் செயலர், சென்னை–9.
நிதி (ந.நி (ம). கு.வ /நிகு IV/வ.செ.பொது I/வ.செ பொது II) துறை , சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1, அ.ந.2, வ.செ
மற்றும் பொது )துறை, சென்னை–9.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்**